**வழக்கு எண்: 1/2020**

எதிரி தரப்பில் சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க அ.சா.1 திருமதி.கண்ணகி அவர்கள் இந்நீதிமன்றத்தில் இன்று (22.01.2021) திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்விக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக அனுமதிக்கப்பட்டார்.

**1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சத்தியமாகச் சொல்கிறேன். நான் பரிசீலித்த ஆவணங்களில் 2 மகஜர்கள் இருந்தது. ஆனால் எத்தனை நபர்களுடைய வாக்குமூலங்கள் இருந்தது என்று ஞாபகமில்லை. 2-வது எதிரி இவ்வழக்கைப்பொறுத்து அரசு ஊழியர் அல்லாத நபர் ஆவார். அவரைப்பொறுத்து வாக்குமூலங்களிலும், கைப்பற்றுதல் மகஜரிலும் சொல்லப்பட்டுள்ளது. 1-வது எதிரி சம்பவத்தின்போது தனது வழக்கமான கிராம நிர்வாக அலுவலகத்துடன் மறற் 2 கிராம நிர்வாக அலுவலகத்திற்கு பொறுப்பு அதிகாரியாக இருந்துள்ளார். வேப்படைப்பு மற்றும் ஆமூர் ஆகியவை அந்த 2 கிராம நிர்வாக அலுவலகமாகும். ஒவ்வொரு கிராமத்திற்கும் இடையிலான தூரம் தெரியாது. எந்தந்த தேதியில் எந்தெந்த கிராமத்தில் பணியில் 1-ம் எதிரி இருந்தார் என்று சொல்ல இயலாது. கூடுதல் பொறுப்பு உத்தரவு செய்வது வட்டாட்சியர். வாதி 1-ம் எதிரியை சந்தித்த இடம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. ஒவ்வொரு கிராமத்திற்கும் தலையாரி உண்டு. வேப்படைப்பு கிராமத்திற்கு கருப்பசாமி என்ற தலையாரி இருந்தார். மற்ற 2 கிராமங்களுக்கு யார் தலையாரி என்று பெயர் தெரியாது. 1-ம் எதிரியை வாதி சந்தித்த போது அவர் அலுவலகத்தில் இருந்தாரா என்று நான் ஆவணங்களில் பார்க்கவில்லை. வாதி பட்டா கோரி 1-ம் எதிரியை சந்தித்ததாக சொல்லப்பட்டுள்ளது. பட்டா கோருதல் சம்மந்தமான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. வாதியின் மனைவிக்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது பற்றி நான் ஆவணங்களை பார்க்கவில்லை. 2-வது எதிரி யாருடைய உத்தரவின்படி அங்கு வேலை பார்த்தார் என்று தெரியாது. தனிநபர் அவ்வாறு அரசு அலுவலகத்தில் வேலை பார்த்தால் நடவடிக்கை எடுக்கவேண்டியவர் உயர் அதிகாரி ஆவார். வட்டாட்சியர் 2-ம் எதிரி மீது நடவடிக்கை எடுத்தாரா என்று தெரியாது. ஸ்டாம்ப் பேடை கையாண்டது 1-வது எதிரி அல்ல. பினாப்தலின் பவுடரை கையாண்ட நபர் ஸ்டாம்ப் பேடை தொட்டால் அதிலும் பினாப்தலின் பவுடர் இருப்பதற்கு வாய்ப்புண்டு என்றால் எனக்கு அதுபற்றியான நிபுணத்துவம் இல்லை. வாதி பட்டா கோரும் மனுவை எங்கு கொடுத்தார் என்று

தெரியாது. எனவே அதில் முத்திரை வைத்த அலுவலகம், சுருக்கொப்பம் செய்த அதிகாரி பற்றி தெரியாது. நான் ஆவணங்களை சரியாக பரிசீலிக்காமல் இயந்திரத்தனமாக இசைவாணை வழங்கினேன் என்றால் சரியல்ல. எனவே நான் வழங்கிய இசைவாணை செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு மாதிரி இசைவாணை அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.